# 6

# இறைக்கொள்கையும் அரச நிதியும்

*அரசிறை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டமை மற்றும் அரச செலவினத்தில் காணப்பட்ட உயர்வு என்பனவற்றின் காரணமாக 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் இறைச் செயலாற்றம் மோசமடைந்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் காணப்பட்ட விரிவாக்கம், ஆரம்ப நிலுவையில் ஏற்பட்ட தலைகீழான மாற்றம், வெளிநின்ற அரச படுகடனில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றிற்கு வழிவகுத்திருந்தது. வரி மற்றும் வரியல்லா அரசிறை இரண்டும் பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தி நியதிகளிலும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் அரசிறைத் திரட்டல் சுருக்கமடைந்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.5 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் காத்திரமான அமுலாக்கத்தினால் வருமான வரியிலிருந்தான அரசிறையில் கணிசமான அதிகரிப்பிற்கு மாறாக தனியாள் ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து குறைவடைந்த பொருளாதார நடவடிக்கை மற்றும் 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட அரசிறை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம் என்பன மந்தமான அரசிறைச் செயலாற்றத்திற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. அதேவேளை, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியின் 10.7 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 11.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் உயர்வடைந்தமைக்கு வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்களின் மீது காணப்பட்ட உயர்ந்த செலவுகளும் காரணங்களாக அமைந்தன. இதன் விளைவாக, நடைமுறைச் செலவினத்திற்கும் அரசிறைக்குமிடையிலான வேறுபாட்டினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் இதன் காரணமாக அரசின் குறைச் சேமிப்பு நிலைமையும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2019ஆம் ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக, அரசிறை மற்றும் வட்டியல்லாச் செலவினம் என்பனவற்றிற்கிடையிலான வேறுபாட்டினைப் பிரதிபலிக்கப்படுகின்றவாறு நடைமுறை வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளின் நிலையினை எடுத்துக்காட்டுகின்ற ஆரம்ப மீதி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 0.3 சதவீதம் கொண்ட மிகையிலிருந்து மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதம் கொண்ட பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தது. அதேவேளை, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தன. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 3.2 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் காணப்பட்ட விரிவாக்கம் உயர்ந்த கடன்பாடுகளைத் தேவைப்படுத்தியதன் மூலம் வெளிநின்ற படுகடனை 2018இன் இறுதியின் ரூ.11,978 பில்லியனிலிருந்து 2019 யூலை இறுதியில் ரூ.12,646 பில்லியனுக்கு உயர்வடையச் செய்தது. ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் காணப்பட்ட குறைவான இறைச் செயலாற்றம் 2019இன் இலக்கிடப்பட்ட மட்டங்களிலிருந்து முக்கியமான இறை நிலுவைகள் பிறழ்வடைவதனைத் தோற்றுவிக்கும். இருப்பினும் கூட, அரசாங்கம் மூல மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஆரம்ப நிலுவையில் சிறிதளவு மிகையினை எய்துவதற்கு எண்ணியுள்ள அதேவேளையில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் நடைமுறைக் கணக்கு மீதியும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து பிறழ்வடையக்கூடும். இப்பின்னணியில், எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சியானது வரி வலையமைப்பினை விரிவுபடுத்தல், வரி இணங்குவிப்புக்களை அதிகரித்தல் மற்றும் வரி நிருவாகத்தினை மேம்படுத்தல் என்பனவற்றினை இலக்காகக் கொண்ட சீர்திருத்தங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதன் மீது பெருமளவிற்குத் தங்கியிருக்கும். எதிர்பார்க்கப்பட்ட இறைப் பயணத்தினை அடைவதனை நோக்கிய அரசாங்கத்தின் வலுவான கடப்பாடு தேர்தலை எதிர்நோக்கும் இக்காலகட்டத்தில் இறை ஒழுங்கினைப் பேணுவதில் தவிர்க்கமுடியாததொன்றாக இருக்கும்.*

## இறைக் கொள்கை வழிமுறைகள்

- **2019இல் இறைக் கொள்கை அரசிறைத் திரட்சியில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களின் உதவியுடன் இறைப் பற்றாக்குறையினையும் வெளிநின்ற அரச படுகடனையும் நிலையானதொரு விதத்தில் குறைப்பதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது.** 2019இற்கான வரவு செலவுதிட்டப் பற்றாக்குறையும் அரச படுகடனும் முறையே மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திலும் மொ.உ.உற்பத்தியின் 82.6 சதவீதத்திலும் மதிப்பிடப்பட்டுள்ளன. 2019இன் வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, உந்து ஊர்திகள் மற்றும் குடிபானங்கள் மீதான கலால் தீர்வையின் திருத்தங்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் அதிகரிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பல கொள்கை வழிமுறைகள் இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் நடைமுறைக்கிடப்பட்டன. உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் நிதிச் சட்டம் என்பனவற்றைத் திருத்துவதனைத் தேவைப்படும் குறிப்பிட்ட முன்மொழிவுகள் இன்னமும் நடைமுறைக்கிடப்படவில்லை. செலவினப் பக்கத்தில் மூலதனச் செலவினங்களைச் சேமிப்பதற்கும் மீண்டெழும் செலவினங்களை குறிப்பாக, மின்வலு, தொலைபேசி, நீர்வழங்கல், எரிபொருள் பாவனை, எழுதுகருவிகள் போன்ற செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதன் மூலம் குறைப்பதற்குமான வழிவகைகளை அடையாளம் காண்பதற்காக செலவிடல் முகவர்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

- **2019 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு வரி விலக்கல்களை வழங்குவது தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான பல திருத்தங்கள் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இலங்கை அபிவிருத்தி முறிகள் உட்பட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் மீது எவரேனும் வதியும் ஆட்களினால் ஈட்டப்படும் வட்டி வருமானம் மற்றும் நிதியியல் நிறுவனமொன்றில் பேணப்படும் ஏதேனும் வைப்புக்கள் தொடர்பில் 18 வயதிற்குக் குறைவான பிள்ளைகளினால் ஈட்டப்படும் மாதமொன்றிற்கான ரூ.5,000 வரையிலான வட்டி வருமானம் என்பன வருமான வரியிலிருந்து விலக்கப்படும். மேலும், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது எவரேனும் ஆளினால் ஈட்டப்படும் வட்டி வருமானம் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்ற வேளையில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான முறிகளின் மீது எவரேனும் வதிவற்ற ஆட்களினால் ஈட்டப்படும் வருவாய்களுக்கும் விலக்களிக்கப்படும். மேலும், இலங்கைக்கு வெளியே வதியும் எவரேனும் ஆள் இலங்கையில் வதியும் ஆளொருவருக்கு அத்தகைய ஆள் வழங்கிய கடன்கள் மீது செலுத்தப்படுகின்ற வட்டிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்ற போதும் இவ்விலக்கல்களை வதிவற்ற கம்பனியொன்றினால் இலங்கையிலுள்ள அதன் உடமைக் கம்பனியொன்றிற்கு அல்லது துணைக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு பிரயோகிக்கப்படக்கூடாது. மேலும், மாதமொன்றிற்கு ரூ.50,000 இனை விஞ்சாத எவரேனும் வதியும் தனிப்பட்டவர்களுக்கு வேத்துரிமைக் கொடுப்பனவுகள் மற்றும் வாடகைக் கொடுப்பனவுகள் ஒவ்வொரு ஆண்டிற்குமான மதிப்பீடுகளின் ரூ.500,000 கொண்ட வரையறைக்குட்பட்டு பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

- **2019 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு நிதிச் சட்டத்திற்கான திருத்தங்கள் 2019 ஒத்தோபரில் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டன.** அரசிறையை அதிகரிக்கும் நோக்குடனும் அதேபோன்று இறக்குமதிச் செலவினத்தில் ஏற்படும் உயர்வினைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி எந்திரத்தின் இயலளவுடன் தொடர்புபடாது முற்றுமுழுதாகச் செலவு, காப்புறுதி மற்றும் கப்பலேற்றல் பெறுமதியின் அல்லது தயாரிப்பாளர் விலையின் மீது உள்நாட்டு உற்பத்தியினைப் பொறுத்தவரையில் விபரிக்கப்பட்ட வரியற்ற அடிமட்ட அளவிற்கு மேலதிகமாகத் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், காபன் வரி 2019 திசெம்பர் 1 இலிருந்து நீக்கப்படும். மேலும், பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்வதற்காக இலத்திரனியல் நிதிய அட்டைகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெளிநாட்டு வர்த்தகக் கொடுப்பனவுகளின் மீது 3.5 சதவீத வீதத்திலொரு தீர்வை விதிக்கப்பட்டது. வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான தீர்வையின் அமுலாக்கல் நிதி அமைச்சின் வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் பிரகடனப்படுத்தப்படும்.

- **சென்மதி நிலுவையின் மீதான அழுத்தத்தை தளர்த்தும் நோக்குடன் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் உயர்வடைவதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் ஆரோக்கிய விடயங்களைக் கரிசனையில் கொண்டு இனிப்புக் குடிபானங்கள் மற்றும் சிகரெட்டுக்களின் நுகர்வினை ஊக்கம் குன்றச் செய்வதற்காகவும் கலால் தீர்வைக்கு பல திருத்தங்கள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.** 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2000 கன செ.மீற்றருக்குக் குறைவான எந்திர இயலளவுடன் கூடிய உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை 2019 மாச்சு 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது. எனினும், சிநேகபூர்வ சுற்றாடல் போக்குவரத்து மாதிரியினை ஊக்குவிப்பதற்காக மின்வலு ஊர்திகள் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. அதேவேளை, குடிபானங்கள் மீதான கலால் தீர்வை, உற்பத்தியில் உள்ளடங்கியிருக்கும் சீனியில் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டது. மேலும், 2019 மாச்சு 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரெட் மற்றும் உள்நாட்டில்

6

தயாரிக்கப்படும் குடிவகைகள் மீதான கலால் தீர்வைகள், ஆண்டுப் பணவீக்கம் மற்றும் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி என்பனவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில் சுட்டெண்ணிடல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட குறைந்தபட்ச வருடாந்தத் தீர்வை அதிகரிப்புடன் அதிகரிக்கப்பட்டது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட குடிவகை மீதான கலால் தீர்வை 2019 மாச்சிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது.

- **பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட தளம்பல்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சுங்கத் தீர்வை அமைப்பிற்கு மாற்றங்கள் செய்யப்பட்ட வேளையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு சிறப்பு பண்டத் தீர்வை காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டது.** பெற்றோலிய இறக்குமதிகள் மீதான (92 ஒக்ரேன்) சுங்கத் தீர்வைத் தளர்த்தல் 2019 யூனில் லீற்றர் ஒன்றிற்கான ரூ.19 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.18 இற்குக் குறைக்கப்பட்டதுடன் இது 2019 செத்தெம்பரில் லீற்றரொன்றிற்கு ரூ.17 இற்கு மேலும் குறைக்கப்பட்டது. சிறப்பு டீசலைப் பொறுத்தவரையில், சுங்கத் தீர்வை 2019 யூனில் லீற்றர் ஒன்றிற்கு ரூ.10.55 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.15 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் லீற்றர் ஒன்றிற்கு ரூ.1 என்ற பிரயோகிக்கத்தக்க தீர்வைத் தளர்த்தல் 2019 யூலையில் புறக்கீடு செய்யப்பட்டது. அதேவேளை, பெற்றோல் (95 ஒக்ரேன்) மற்றும் தன்னியக்க டீசல் மீதான சுங்கத் தீர்வைகள் 2019 யூலை இறுதியில் முறையே லீற்றரொன்றிற்கு ரூ.35 சதவீதமாகவும் லீற்றரொன்றிற்கு ரூ.5.85 ஆகவும் விளங்கின. எனவே, 2019 செத்தெம்பர் இறுதியில் டீசல், சிறப்பு டீசல், பெற்றோல் (92 ஒக்ரேன்) மற்றும் பெற்றோல் (95 ஒக்ரேன்) என்பனவற்றின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வைகள் முறையே லீற்றருக்கு ரூ.2.85, லீற்றருக்கு 15, லீற்றருக்கு 18 மற்றும் லீற்றருக்கு ரூ.35 ஆகக் காணப்பட்டன. மேலும், இல.2113/2 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ் மசகு எதில் மதுசாரம் மற்றும் டயர், ரியூப் என்பன மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்ட வேளையில் பந்தயக்காரர்கள் மீதான சுங்கத் தீர்வை விலக்கப்பட்டது. மேலும், 261 பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையின் அலகு வீதம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு உழுந்து, உருளைக்கிழங்கு, பேரீச்சம்பழம் (உடன் மற்றும் வத்தல்), தோடம்பழம் (உடன்), அப்பிள் (உடன்) மற்றும் மரக்கறி எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை இவ்வாண்டுக் காலப்பகுதியில் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. உள்நாட்டுச் சந்தையின் விலைத்தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பெரிய வெங்காயம் மற்றும் சோளத்தின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை குறைக்கப்பட்டது. மேலும், வர்த்தகம், தாராளமயப்படுத்தல் மீதான அரசின் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் 25 பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை 2019 மாச்சில் நீக்கப்பட்ட வேளையில், தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கான துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தி தீர்வை மீது விலக்கல்களும் சலுகை வீதங்களும் வழங்கப்பட்டன.

- **அரசிறை உருவாக்கத்தினை உயர்த்தும் நோக்குடன் 2019 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு கட்டணங்களும் விதிப்புக்களும் திருத்தப்பட்டன.** இதன்படி, வழமையான முறையில் கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கான கட்டணம், அவசர அடிப்படையிலான விண்ணப்பக் கட்டணம் மற்றும் கடவுச்சீட்டுக்களில் மாற்றங்கள் செய்வதற்கான கட்டணம் என்பன முறையே ரூ.500 இனாலும் ரூ.5,000 இனாலும் ரூ.500 இனாலும் ரூ.3,500 இற்கும் ரூ.15,000 இற்கும் மற்றும் ரூ.1,000 இற்கும் அதிகரிக்கப்பட்டன. இல.2116/62 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ், நாட்டிலிருந்து புறப்படுகை தீர்வை 2019 மாச்சில் பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 10இலிருந்து ஐ.அ.டொலர் 60 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், 2019 ஓகத்தில் விடுக்கப்பட்ட இல.2134/5 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ் புறப்படுகை தீர்வையின் அதிகரிப்பு நடைமுறைக்குவரும் திகதி சுற்றுலாத் துறைக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2020 பெப்புருவரி 1ஆம் திகதிக்குத் திருத்தப்பட்டது. மேலும், 2019 வரவு செலவுத்திட்டம், றுட்ஜினோ தவிர்ந்த சூதாட்ட வியாபாரத்திற்கான ஆண்டுத் தீர்வையினை ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.400 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு முன்மொழிந்த வேளையில் றுட்ஜினோ விளையாட்டு வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்காக ரூ.1 மில்லியன் கொண்ட ஆண்டுத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஆளொருவருக்கான சூதாட்ட நுழைவுக்கட்டணம் ஐ.அ.டொலர் 100 இலிருந்து ஐ.அ.டொலர் 50 இற்குக் குறைக்கப்பட்டது.

- **வரித் தளத்தினை விரிவாக்கிக் கொள்வதனூடாகவும் வரி இணங்குவிப்புக்களை அதிகரித்துக் கொள்வதன் மூலமும் அரசிறைச் சேகரிப்பினை மேம்படுத்திக் கொள்ளும் நோக்குடன் வரி நிருவாகத்தினை வலுப்படுத்திக் கொள்ளும் வழிமுறைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன.** 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளை கூட்டிணைக்கும் பொருட்டு உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை தரமுயர்த்தப்பட்டது. அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை பொருளாதார பணிக் கட்டணம், முத்திரைத் தீர்வை மற்றும் பந்தயம், சூதாட்டத் தீர்வைகள் தவிர்ந்த அனைத்து வரி வகைகளையும் கண்காணிக்கின்றது. இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தனியாள் வருமான வரி என்பனவற்றின் பதிவுகள் அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டன. அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக பல நிகழ்ச்சித்திட்டங்கள்

நடத்தப்பட்டன. இவற்றுடன் சேர்த்து 2019 சனவரியிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட வரிக் கோப்புக்களின் எண்ணிக்கை 30,569 இனால் 1,212,125 இற்கு அதிகரித்தது. மேலும், உண்ணாட்டரசிறைத் திணைக்களம் வரி நிருவாகத்தினை நவீனமயப்படுத்துவதற்காக நிறுவன மயப்படுத்தப்பட்ட வியாபார நடைமுறைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. இவை முக்கியமாக தொழிற்பாட்டு ரீதியான இணைப்புக்களுடன் சேர்த்து உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினை மீளமைத்தல், வடிவமைப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவினை உருவாக்குதல், வரி செலுத்துவோருக்கிடையேயான இடைத்தொடர்புகளை விரைவுபடுத்துவதற்கான மிக வினைத்திறன் கொண்ட முகாமைத்துவ அமைப்பு; பாரிய வரி செலுத்துனர் பிரிவினை வலுப்படுத்துதல்; கட்டாய இ-கோப்பிடலின் அறிமுகம் மற்றும் வரி செலுத்துவோருக்கிடையிலான இலக்கங்கள் பயன்படுத்தப்படுவதனை அதிகரித்தல் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிப்பதற்காக ஒரே கூரையின் கீழான தேசிய நிலையமொன்றினை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை இலங்கைச் சுங்கம் ஆரம்பித்திருக்கிறது.

- **செலவினப்பக்கத்தில், அரச செலவினத்தின் சிறந்த முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, நிதி அமைச்சு அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் 2019இல் அவற்றின் மூலதனச் செலவினத்தினை 15 சதவீதத்தினால் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென 2019 ஏப்பிறலில் அறிவுறுத்தியது. மேலும் 2019 செத்தெம்பரில் நிதி அமைச்சு முன்னுரிமையல்லாத செயற்றிட்டங்கள், புதிய செயற்றிட்டங்கள் மற்றும் அத்தியாவசியமல்லாத பொருட்களின் கொள்வனவு என்பனவற்றைப் பிற்போடுவதன் மூலம் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் அவற்றின் மூலதனச் செலவினத்தினை மேலும் 10 சதவீதத்தினால் குறைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கியது. மேலும், இலக்கம் 04/2019 கொண்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் கீழ் அனைத்து அரச நிறுவனங்களும் முன்மதியுடைய செலவினக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைக்கிடுமாறும் மீண்டெழும் செலவினங்களை குறிப்பாக, மின்வலு, தொலைபேசி, நீர்வழங்கல், எரிபொருள் பாவனை மற்றும் எழுதுகருவிகள் என்பனவற்றின் செலவுகளைச் சிக்கனப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. எதிர்வரும் சனாதிபதி தேர்தலைக் கருத்தில் கொண்டு, 2020இன் முதல் நான்கு மாதங்களுக்கான கணக்கு வாக்கிற்கு 2019 ஒத்தோபரில் பாராளுமன்றத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

- **2019 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அரச துறைச் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டதுடன் ஓய்வூதிய முரண்பாடுகள் திருத்தப்பட்டதுடன் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான பணி வழங்கலின் வினைத்திறன் தன்னியக்கப்படுத்தப்பட்ட செய்முறைகளின் ஊடாக மேம்படுத்தப்பட்டது.** மேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சிறப்புச் சம்பள ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரை 2019 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு 2019 யூலை 1இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அரச துறை ஊழியர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.2,500 கொண்ட இடைக்காலப் படியொன்று வழங்கப்பட்டது. அரச பணியில் காணப்படும் சம்பள முரண்பாடுகளைத் திருத்துவதற்காக 2020 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் குறைந்தபட்சம் மாதமொன்றிற்கு ரூ.3,000 இலிருந்து உயர்ந்தபட்சம் ரூ.24,000 வரையிலான மாதாந்த சம்பள அதிகரிப்பினை வழங்குவதற்கு 2019 ஒத்தோபரில் அமைச்சரவை ஒப்புதலொன்றினை வழங்கியிருக்கிறது. 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2016 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் வேறுபாடுகள் காணப்பட்டமையினால் ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, 2019 யூலை 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஓய்வூதியம் பெற்ற நாளன்று காணப்பட்ட ஓய்வூதியத்தாரரின் அடிப்படைச் சம்பளத்திற்கு இலக்கம் 03/2016 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் முதல் இரண்டு கட்டங்களை உட்புகுத்துவதற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலக்கம் 03/2015 கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கையின் கீழ் (திருத்தம் III) ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறைகளின் தன்னியக்கச் செய்முறைகளை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் அரச பணி வழங்கலின் வினைத்திறனையும் தரங்களையும் மேம்படுத்துவதற்கு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன. பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2019 இன் கீழ், இறந்துபோன ஓய்வூதியக்காரர்களுக்கு மோசடியான முறையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதனைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இதன்படி, இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களில் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக ஏனைய தரப்பினர் அரச பணத்தினை மோசடியாகப் பயன்படுத்துகின்றனர் என அறிவிக்கப்பட்டிருப்பதன் காரணமாக பிரதேச செயலகங்கள் ஓய்வூதியம் பெறுபவர் மரணம் அடையும் பொழுது அல்லது வெளிநாட்டிற்குச் செல்லும் பொழுது உடனடியாக அத்தகைய ஆட்களின் பதிவேட்டினை இற்றைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டன.

- **அரச தனியார் துறை பங்குடமைகளை மேம்படுத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான இறைச் செயற்பரப்பிற்கான**

6

**தடைகளை இலகுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, முக்கிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் தனியார் துறை நிதியிடலுக்கு வசதியளிப்பதன் மூலமும் அரச தனியார் துறை பங்குடமைக்கான சூழலை இயலுமைப்படுத்துவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன. மேலும், அரச தனியார் துறை பங்குடமைகளுக்கான தேசிய முகவராண்மை நிதி அமைச்சின் ஆலோசனையுடன் அரச தனியார் பங்குடமைக்கான வழிகாட்டல்களை மீளாய்வு செய்து பூர்த்தி செய்துள்ளது. மேலும் முன்னேற்றங்களுக்காக 2019 ஏப்பிறலில் தேசிய கொள்வனவு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், அரச தனியார் துறை பங்குடமைக்கான தேசிய முகவராண்மை அடையாளம் காணப்பட்ட அரச தனியார் துறை பங்குடமைச் செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்பான அமைச்சுக்களுக்கு உதவிகளை வழங்கியது.

- **நலன்புரி நன்மைகள் திட்டங்களின் வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதன்படி, இலங்கையிலுள்ள அனைத்து நலன்புரியுடன் தொடர்பான நன்மைகளுக்காக தேவையான சட்டக் கட்டமைப்பினையும் வெளிப்படையான தெரிவு செயன்முறைகளையும் வழங்குவதற்காக நிறுவப்பட்ட நலன்புரி நன்மைகள் சபை நான்கு முக்கிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்[1] தொடர்பில், நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளுக்காக குறைந்த வருமானக் குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான தெரிவு முறையியலொன்றினை வெளியிட்டதுடன் இத்தெரிவுசெய்யும் முறையியல் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஒருங்கிணைக்கப்பட்ட சமூகப் பதிவுத் தகவல் முறைமையொன்றினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது, வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின், முக்கியமாக நலன்புரி நன்மைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் நோக்கங்களுக்காக, நலன்புரி நன்மைபெறுநர்களின் தரவுகளைச் சேமித்து வைப்பதற்கான இலத்திரனியல் தரவுத் தளமொன்றாகும். மேலும், 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் சமுர்த்தி பயன்பெறுநர்களின் எண்ணிக்கையினை 600,000 இனால் விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

- **மத்திய அரசின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான சுமையினைக் குறைக்கும் பொருட்டு முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** 2017 மாச்சில் கம்பனி நோக்க அறிக்கையில் கையெழுத்திட்ட ஐந்து அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் 2018ஆம் ஆண்டின் முதலரைப்பகுதிக்கான செயலாற்ற அறிக்கைகள் 2019 யூலையில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், எட்டு தெரிந்தெடுக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், லங்கா சதோச பிறைவேற் லிமிடெட், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம், அரச மரக் கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், மில்கோ பிறைவேற் லிமிடெட், தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபை மற்றும் புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கங்கள் பணியகம் என்பன அவற்றின் தொழிற்பாடுகளது வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு 2019 யூனில் கம்பனி நோக்க அறிக்கையில் கையெழுத்திட்டன. மேலும், பன்னாட்டு பால்மா விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் செலாவணி வீதம் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்திலும் உள்நாட்டுப் பால் கைத்தொழிலினைப் பாதுகாப்பதற்காகவும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவிற்கான விலைச் சூத்திரமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவையினால் ஒப்புதல் 2019 மாச்சில் வழங்கப்பட்டது. இதன் விளைவாக சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட விலைச் சீராக்கங்கள் 2019 மாச்சு 15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நடைமுறைக்கிடப்பட்டன. மேலும், திரவப் பெற்றோலியத்திற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் பொறிமுறையொன்றும் 2019 ஒத்தோபர் 4ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், இலங்கை மின்சபையின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்தும் பொருட்டு மின்னியலுக்கான விலைப் பொறிமுறையொன்றினை 2020இல் நடைமுறைப்படுத்துவது அவசியமாகவிருக்கிறது.

- **அரச பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத் தன்மையினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக 2019 காலப்பகுதியில் மத்திய வங்கியினால் பல முன்னெடுப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** பத்திரங்களற்ற பிணையங்களின் பற்று மற்றும் வரவு ஒவ்வொன்றினையும் பதிவுசெய்வதற்காக வணிக நேரடிப் பங்கேற்பாளர்களினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதேநேர அறிவித்தல்களை (குறுஞ்செய்தி மற்றும்/ அல்லது மின்னஞ்சல் அறிவித்தல்கள்) வழங்குவதற்காக லங்கா செகுயர் முறைமை தரமுயர்த்தப்பட்டது. இவ்வசதிகளுக்கு இடமளிக்கும் பொருட்டு லங்கா செட்டில் முறைமையின் விதிகள் 2019 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திருத்தப்பட்டன. மேலும், விலை கண்டறிதல் மற்றும் சந்தையின் வினைத்திறனை அதிகரித்தல் என்பனவற்றிற்கு

6

1 சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான நிதியியல் ஆதரவு, தாழ்ந்த வருமான ஊனமுற்ற நபர்களுக்கான ஆதரவு, சிறுநீரக நோயாளர்களுக்கான நிதியியல் உதவி

மேலும் வசதியளிப்பதற்காக 2019 யூலையிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கலின் மீதான பணிப்புரைகளுக்கு பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **இலங்கையின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் தொடர்பில் பிட்ச் தற்பொழுதுள்ள நாட்டிற்கான கொடுகடன் தரமிடலினை 2019 மூன்றாம் காலாண்டில் மீள உறுதிப்படுத்தியதுடன் ஏனைய முக்கிய பன்னாட்டுத் தரமிடல் முகவராண்மைகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் அவற்றின் மீளாய்வுகளை இறுதிப்படுத்தியுள்ளன.** பிட்ச் 2019 செத்தெம்பரில் உறுதியான தோற்றப்பாட்டுடன் இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் செலுத்தத்தவறும் தரமிடலை “பீ” இல் உறுதிப்படுத்தியது. தற்போதைய தரமிடல்களின் நிலை மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ்சின் (மூடிஸ்) “பீ2” (உறுதியானது) இலும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் “பீ” (உறுதியானது) இலும் நிலைப்படுத்தப்பட்டது.

- **புதிதாக இயற்றப்பட்ட 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் 2019 - 2023 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயமும் 2019இல் வெளியிடப்பட்டது.** 2019 யூனில் பொறுப்பு முகாமைத்துவ நோக்கங்களுக்காக ரூ.480 பில்லியன்களைத் திரட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. வரலாற்றில் முதற்றடவையாக அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் யப்பானின் முறிச் சந்தைகளில் (சமுராய் முறி) இருந்து நிதிகளைத் திரட்டுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. இந்நிதி தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழிப்படுத்தப்படும். நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் முக்கியமாக அரசின் வரவு செலவுத்திட்டத் தேவைகளை சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் நிதியிடுவதனையும் அதேவேளை, படுகடன் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டங்களில் முகாமைப்படுத்துவதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் படுகடன் சாதனங்களை பொருத்தமான உள்ளமைப்பொன்றில் கட்டியெழுப்புவதன் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. இதன்படி, நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் முக்கிய குறிக்கோள்களாக, வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகளை 2018 இறுதியில் அவதானிக்கப்பட்ட மட்டத்தில் பேணுதல், வெளிநாட்டு படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரி காலத்தினை நீடித்தல் மற்றும் குறுங்கால படுகடன் முதிர்ச்சியின் பங்கினை தற்போதைய மட்டங்களிலிருந்து குறைத்தல் என்பன காணப்பட்டன. அடுத்த பல ஆண்டு காலப்பகுதிக்கு நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயங்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரசாங்கத்தின் வருடாந்தக் கடன்பாட்டுத் திட்டத்தினை வடிவமைப்பது தவிர்க்க முடியாததொன்றாக இருக்கும்.

## அரச வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### முக்கிய இறை நிலுவைகள்

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் முக்கிய இறை நிலுவைகள் தேய்வடைந்து, குறைந்த அரசிறைத் திரட்சி மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உயர்வான செலவினம் என்பனவற்றின் தாக்கத்தைப் பிரதிபலித்தன.** 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 3.2 சதவீதத்திலிருந்து (ரூ.461.7 பில்லியன்) மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திற்கு (ரூ.684.1 பில்லியன்) அதிகரித்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் ஆரம்ப நிலுவை 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.3 சதவீதம் (ரூ.47.1 பில்லியன்) கொண்ட மிகைக்கெதிராக மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் (ரூ.122.5 பில்லியன்) 0.8 சதவீதம் கொண்ட பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அரச குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2018இன் இதே காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதம் கொண்ட பற்றாக்குறையிலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரைபடம் 6.1
முக்கிய இறைக் குறிகாட்டிகள்




மூலம்: நிதி அமைச்சு

## அரசிறை மற்றும் கொடைகள்

### அரசிறை

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 7.5 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த வரியும் வரியல்லா அரசிறைச் சேகரிப்புக்களும் காரணங்களாக அமைந்தன.** பெயரளவு நியதிகளில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்த அரசின் அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,079.9 பில்லியனிலிருந்து ரூ.1,031.9 பில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு உந்து ஊர்திகள், பெற்றோலிய உற்பத்திகள், புகையிலை மற்றும் சிகரெட்டுக்கள் என்பனவற்றின் இறக்குமதி மீதான கலால் தீர்வை, அதேபோன்று சிறப்புப் பண்டத் தீர்வை, செஸ் தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் வருமான வரிகள், படுகடன் மீள்கொடுப்பனவுத் தீர்வை, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, இறக்குமதித் தீர்வைகள் மற்றும் துறைமுக மற்றும் வானூர்திநிலையத் தீர்வைகள் என்பனவற்றிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் அதிகரித்தது. மத்திய வங்கியிலிருந்தான இலாபங்கள் கிடைக்கப்பெறாமை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் குறைவடைந்தமையும் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வரியல்லா அரசிறை வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தது. ஒட்டுமொத்தமாக, இக்காலப்பகுதியில் மொத்த அரசிறைச் சேகரிப்பு 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 48.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ.2,344.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டில் 44.0 சதவீதமாகக் காணப்பட்டது.

- **பெயரளவு நியதிகளில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வருமான வரிகளிலிருந்தான அரசிறை ரூ.184.9 பில்லியனுக்கு 17.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் காத்திரமான முறையில் நடைமுறைக்கிடப்பட்டமையே முக்கிய காரணமாகும்.** மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.1 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. பெயரளவு நியதிகளில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள் 24.4 சதவீதத்தினால் ரூ.85.7 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ.24.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில்

அட்டவணை 6.1

அரசிறையின் பொருளாதார பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2017 | 2018 (அ) | 2019 ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் | 2018 சன-யூலை (அ) | 2019 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,670.2** | **1,712.3** | **2,077.0** | **983.3** | **944.4** |
| வருமான வரி | 274.6 | 310.4 | 385.0 | 158.0 | 184.9 |
| பெறுமதி சேர் வரி | 443.8 | 461.7 | 529.0 | 269.0 | 265.6 |
| கலால் வரிகள் | 469.5 | 484.3 | 593.0 | 299.1 | 225.8 |
| இறக்குமதித் தீர்வைகள் | 136.5 | 97.0 | 140.0 | 54.2 | 55.2 |
| துறைமுகங்கள் மற்றும் வானூர்தி தீர்வை | 102.4 | 113.9 | 115.0 | 64.2 | 64.5 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 69.0 | 71.4 | 91.0 | 41.5 | 42.2 |
| சிறப்புப் பண்டத் தீர்வை | 71.4 | 75.8 | 90.0 | 43.9 | 42.2 |
| செஸ் | 59.6 | 53.4 | 54.0 | 29.3 | 28.3 |
| ஏனைய வரிகள் | 43.5 | 44.4 | 80.0 | 24.0 | 35.7 |
| **வரி அல்லா வருமானம்** | **161.4** | **207.7** | **267.0** | **96.7** | **87.5** |
| **மொத்த வருமானம்** | **1,831.5** | **1,920.0** | **2,344.0** | **1,079.9** | **1,031.9** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* நிதி அமைச்சு

ரூ.29.7 பில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பிடித்துவைத்தல் வரி மற்றும் பொருளாதாரப் பணிக் கட்டணம் என்பனவற்றிலிருந்தான அரசிறை முறையே ரூ.29.4 பில்லியனுக்கும் ரூ.40.1 பில்லியனுக்கும் முறையே 8.6 சதவீதத்தினாலும் 6.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை பெயரளவுநியதிகளிலும் அதேபோன்று மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து நடவடிக்கைகள் மிதமடைந்தமையின் தாக்கத்தினையும் நலக்கவனிப்புப் பணிகள் மற்றும் துணிகளின் இறக்குமதிகள் மீது 2018இன் பிற்பகுதியில் வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்கல்களையும் பிரதிபலித்தது.** இதற்கமைய, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை ரூ.265.6 பில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 1.9 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை ரூ.165.6 பில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இறக்குமதி தொடர்பான விடயங்கள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.99.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.100.0 பில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. அதேவேளை, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்த வரி அரசிறையின் சதவீதமாக பெறுமதிசேர் வரி அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 27.4 சதவீதத்திலிருந்து 28.1 சதவீதத்திற்கு

அதிகரித்த வேளையில், 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்த அரசிறைக்கான பெறுமதிசேர் வரி அரசிறையின் பங்களிப்பு 24.9 சதவீதத்திலிருந்து 25.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- **பெயரளவு நியதிகள் மற்றும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஊர்திகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புகையிலை, சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை குறைவடைந்தமையே காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.225.8 பில்லியனிலிருந்து 24.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உந்து ஊர்திகளின் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.71.0 பில்லியனுக்கு 47.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 2018இன் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளின் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. அதேவேளை, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.39.2 பில்லியனிலிருந்து ரூ.35.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2018இன் நவெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தன்னியக்க டீசலின் இறக்குமதி மீதான கலால் தீர்வை லீற்றரொன்றிற்கு

வரைபடம் 6.2
அரசிறையின் உள்ளடக்கம்
(சன - யூலை 2019)



மூலம்: நிதி அமைச்சு

ரூ.13 இலிருந்த லீற்றரொன்றிற்கு ரூ.6 இற்குக் குறைக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் சிகரெட் விற்பனைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக புகையிலை மற்றும் சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.51.0 பில்லியனுக்கு 7.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், குடிவகையிலிருந்தான கலால் வரி அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.65.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.66.2 பில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் படுகடன் மீள்கொடுப்பனவுத் தீர்வை, இறக்குமதித் தீர்வைகள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் துறைமுகங்கள், வானூர்திநிலையத் தீர்வைகள் என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் பெயரளவு நியதிகளில் அதிகரித்த வேளையில் சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் செஸ் வரியிலிருந்தான அரசிறை 2018இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.** 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுத் தீர்வை 2019 யூலை வரையில் ரூ.9.6 பில்லியனைச் சேகரிப்பதற்குப் பங்களித்தது. இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2018இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.54.2 பில்லியனிலிருந்து ரூ.55.2 பில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2019 மாச்சு 6ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 261 அடையாளம் காணப்பட்ட பொருட்களுக்கான சுங்கத் தீர்வை 10 சதவீதத்தினால் அதிகரித்தமையும் 2019 யூன் 12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பெற்றோல் (92 ஒக்ரேன்) மற்றும் சிறப்பு டீசல் என்பன மீதான ஏற்புடைத்தான தீர்வை வீதங்கள் உயர்வடைந்தமையும் முக்கியமான ஆதரவினை வழங்கின. மேலும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையங்களின் தீர்வையிலிருந்தான அரசிறை முறையே 1.8 சதவீத்தினாலும். 0.4 சதவீதத்தினாலும் ரூ.42.2 பில்லியனுக்கும் ரூ.64.5 பில்லியனுக்கும் உயர்வடைந்தன. எனினும், செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.29.3 பில்லியனிலிருந்து ரூ.28.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2019 மாச்சு 6ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப்பொருட்கள் மீதான தீர்வை அகற்றப்பட்டமை ஓரளவிற்குக் காரணமாக இருந்த வேளையில் சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ரூ.42.2 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் வரியல்லா அரசிறை பெயரளவு நியதிகளிலும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தின் சதவீதமாகவும்**

**வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறை ரூ.87.5 பில்லியனுக்கு 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.7 சதவீதத்திலிருந்து 0.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் மத்திய வங்கியிலிருந்தான இலாபங்கள் பெறப்படாமையும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் 31.8 சதவீதத்தினால் ரூ.12.1 பில்லியனுக்குக் குறைவடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. எனினும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிந்தான அரசிறை ரூ.46.4 பில்லியனுக்கு 14.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு புறப்படுகைத் தீர்வை மற்றும் விதிப்புக்கள், தண்டப் பணங்கள், பறிமுதல்கள் என்பனவற்றிலிருந்தான அரசிறை அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். மேலும், வட்டி வருமானத்திலிருந்தான அரசிறை ரூ.4.4 பில்லியனிலிருந்து ரூ.7.5 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில், சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்களிலிருந்தான அரசிறை ரூ.16.2 பில்லியனுக்கு ரூ.12.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், வாடகை வருமானம் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ரூ.2.0 பில்லியனிலிருந்து ரூ.2.6 பில்லியனுக்கு அதிகரித்தது.

## கொடைகள்

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடைகளின் பகிர்ந்தளிப்புக்கள் 2019இற்காக மதிப்பிடப்பட்ட அளவிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தது.** இதன்படி, 2019இன் முதல் ஏழு மாதங்களில் அடையப்பட்ட வெளிநாட்டுக் கொடைகளின் தொகை 2019இற்கான ரூ13.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீடுகளுடனும் 2018இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.5.0 பில்லியனுடனும் ஒப்பிடுகையில் ரூ.1.1 பில்லியனாகக் காணப்பட்டது.

## செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 10.7 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 11.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் அரச செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ரூ.1,717.1 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்தன. 2019இன் முதல் ஏழு மாதங்களில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2019இற்கான ஆண்டு மதிப்பீட்டின் 56.4 சதவீதத்திற்கு வகைகூறின.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.4 சதவீதத்திலிருந்து 8.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வட்டிக் கொடுப்பனவுகளிலும் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2018இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதத்தினால் ரூ.1,343.7 பில்லியனுக்கு அதிகரித்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 10.4 சதவீதத்தினால் ரூ.561.6 பில்லியனுக்கு உயர்வடைந்த வேளையில் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வட்டிக் கொடுப்பனவுகள் 3.5 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டுப் படுகடன் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும். 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.154.2 பில்லியனுக்கு 34.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூலை இறுதி வரையான காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்கள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட வெளிநின்ற வர்த்தகக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் செலாவணி வீதத்தின் தேய்வின் தாக்கம் என்பனவே காரணங்களாக அமைந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் ரூ.407.4 பில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு

6

### அட்டவணை 6.2
### செலவினத்தின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2017 | 2018 (அ) | 2019 ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் | 2018 சன-யூலை (அ) | 2019 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **1,927.7** | **2,089.7** | **2,308.0** | **1,218.8** | **1,343.7** |
| இதில், சம்பளங்களும் கூலிகளும் | 588.5 | 626.0 | 690.0 | 371.0 | 388.2 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 735.6 | 852.2 | 913.0 | 508.8 | 561.6 |
| வெளிநாட்டு | 164.9 | 212.7 | 220.0 | 114.5 | 154.2 |
| உள்நாட்டு | 570.6 | 639.5 | 693.0 | 394.3 | 407.4 |
| சமுர்த்தி | 39.7 | 39.2 | 50.0 | 23.0 | 22.7 |
| ஓய்வூதியங்கள் | 181.1 | 194.5 | 215.0 | 111.2 | 124.3 |
| வளமாக்கி மானியம் | 30.4 | 26.9 | 35.0 | 11.8 | 25.3 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **645.4** | **603.5** | **734.0** | **327.8** | **373.4** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **2,573.1** | **2,693.2** | **3,042.0** | **1,546.6** | **1,717.1** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* நிதி அமைச்சு

வரைபடம் 6.3
அரச செலவினத்தின் உள்ளடக்கம்
(சன - யூலை 2019)




*மூலம்:* நிதி அமைச்சு

உள்நாட்டுப் படுகடன் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்களும் 2019 யூலை இறுதியில் காணப்பட்டவாறு வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் இருப்பு 7.2 சதவீதத்தினால் அதிகரித்தமையும் காரணங்களாக அமைந்தன. பெயரளவு நியதிகளில் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் ரூ.312.8 பில்லியனுக்கு 18.0 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அத்தகைய செலவுகள் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் 1.8 சதவீதத்திலிருந்து 2.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வளமாக்கி உதவுதொகை மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான உயர்ந்த செலவினம் காரணமாக அமைந்தது. வளமாக்கி உதவுதொகை மீதான செலவினம் அதிகரித்தமைக்கு நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கு வழங்கப்பட்ட உதவுதொகை 50 கி.கிறாம் கொண்ட பொதியொன்றிற்கு ரூ.500 இனால் அதிகரிக்கப்பட்டமை காரணமாக அமைந்த வேளையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு 2019 யூலை 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செய்யப்பட்ட திருத்தங்களும் ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரணங்களாக அமைந்தன. எனினும், சமுர்த்திக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ரூ.22.7 பில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. மேலும், இக்காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் ரூ.388.2 பில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் உயர்வடைந்தன.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதி மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரு நியதிகளிலும் அதிகரித்தன.** இதன்படி, பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ரூ.373.4 பில்லியனுக்கு 13.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் 2.3 சதவீதத்திலிருந்து 2.4 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தேறல் செய்யப்பட்ட மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 43.7 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 50.9 சதவீதத்திற்கு வகைகூறின.

### வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடல்

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உள்நாட்டு மூலங்களினூடாக பெருமளவிற்கு நிதியிடப்பட்டது.** இவ்வாண்டுக் காலப்பகுதியில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.187.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.571.4 பில்லியனாக விளங்கியது. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2018இன் இதே காலப்பகுதியின் ரூ.274.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.112.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு நிதியிடல் அதிகரித்தமைக்கு 2018இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வங்கியல்லாத் துறை மற்றும் வங்கித்துறை இரண்டிலுமிருந்தான உயர்ந்த கடன்பாடுகளே காரணமாகும்.** பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியிடல் 2018இன் இதே காலப்பகுதியின் ரூ.187.8 பில்லியனிலிருந்து ரூ.400.5 பில்லியனுக்கு அதிகரித்து மொத்த உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாட்டில் 70.1 சதவீதத்திற்கு வகைகூறியது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தேறிய வங்கி நிதியிடல்

அட்டவணை 6.3
நிதியீட்டல் மூலங்கள்

ரூ. பில்லியன்

| விடயம் | 2017 | 2018 (அ) | 2018 சன-யூலை (அ) | 2019 சன-யூலை (அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு நிதியிடல்** | **294.3** | **437.2** | **187.6** | **571.4** |
| வங்கி | 187.7 | 109.5 | -0.2 | 107.9 |
| வங்கியல்லா | 106.5 | 327.8 | 187.8 | 400.5 |
| **வெளிநாட்டு நிதியிடல்** | **439.2** | **323.5** | **274.1** | **112.7** |
| கடன்கள் | 0.8 | 7.7 | -20.0 | -5.4 |
| வர்த்தகக் கடன்கள் | 381.2 | 456.9 | 321.9 | 136.2 |
| திறைசேரி முறிகளின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | 43.7 | -126.4 | -22.4 | -18.3 |
| திறைசேரி உண்டியல்களின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | 13.6 | -14.6 | -5.5 | 0.2 |
| **மொத்த நிதியிடல்** | **733.5** | **760.8** | **461.7** | **684.1** |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 6.4
பற்றாக்குறைக்கு நிதியிடல்




*மூலம்:* நிதி அமைச்சு

வரைபடம் 6.5
வெளிநின்ற மத்திய அரச படுகடன்




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.0.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.170.9 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளூடாக வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், மத்திய வங்கியிலிருந்தான நிதியிடல் 2018இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.31.6 பில்லியன் கொண்ட தேறிய நிதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ரூ.126.4 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவுசெய்தமைக்கு மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சியே காரணமாகும்.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் உள்நாட்டுக் கடன்பாடுகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கின.** 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களிலிருந்தான கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ.81.3 பில்லியனிலிருந்து ரூ.149.9 பில்லியனுக்கு அதிகரித்தன. அதேவேளை, 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி முறிகளிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 2018இன் இதே காலப்பகுதியின் ரூ.124.9 பில்லியனிலிருந்து ரூ.331.8 பில்லியனுக்கு அதிகரித்தன. 2018இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் காணப்பட்ட ரூ.81.6 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான கடன்பாடுகள் ரூ.47.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவுசெய்தன.

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் வீழ்ச்சியடைந்து நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கணக்கின் பெயரிலான பாரிய மீள்கொடுப்பனவுகளைப் பிரதிபலித்தது.** ஆய்விற்குரிய காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.274.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.112.7 பில்லியனாகக் காணப்பட்டது. தேறிய வெளிநாட்டு நிதியிடல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ரூ.219.7 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகளையும் திறைசேரி உண்டியல்களின் ரூ.0.2 பில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளையும் வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதியின் ரூ.83.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகளையும் ரூ.5.4 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களையும் திறைசேரி முறிகளில் காணப்பட்ட ரூ.18.3 பில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளையும் உள்ளடக்கியிருந்தது.

- **2019ஆம் ஆண்டுப்பகுதியில் அரசாங்கம் இரு படிமுறைகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலினூடாக ஐ.அ.டொலர் 4.4 பில்லியனைத் திரட்டியது.** 2019 மாச்சில் அரசாங்கம் அதன் 13ஆவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெளியிட்டதன் மூலம் ஐ.அ.டொலர் 2.4 பில்லியனைத் திரட்டிக் கொண்டது. இவ்வழங்கலானது 6.85 சதவீதம் கொண்ட விளைவு வீதத்தில் 5 ஆண்டு முதிர்ச்சியுடன் கூடிய ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் மற்றும் 7.85 சதவீதம் கொண்ட விளைவு வீதத்தில் 10 ஆண்டுகள் முதிர்ச்சியுடன் கூடிய ஐ.அ.டொலர் 1.4 பில்லியன் கொண்ட இரண்டு முதிர்ச்சிக் காலங்களை உள்ளடக்கியிருந்தது. 2019 யூனில் ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட மற்றொரு நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கப்பட்டது. இது, 6.35 சதவீத விளைவு வீதத்தில் 5 ஆண்டு முதிர்ச்சியுடன் கூடிய ஐ.அ.டொலர் 500 மில்லியனையும் ஆண்டிற்கு 7.55 சதவீத விளைவு வீதத்துடன்

கூடிய 10 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட ஐ.அ.டொலர் 1.5 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தது.

## அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

### அரச படுகடன்

- **2018இன் இறுதியில் ரூ.11,977.5 பில்லியனாக விளங்கிய மத்திய அரச படுகடன் இருப்பு 2019 யூலை இறுதியில் ரூ.668.4 பில்லியனால் ரூ.12,645.9 பில்லியனுக்கு விரிவடைந்தது.** உள்நாட்டுப் படுகடன் ரூ.435.1 பில்லியனினால் ரூ.6,453.1 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் ரூ.233.2 பில்லியனால் ரூ.6,192.8 பில்லியனுக்கு அதிகரித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக தேறிய நிதியிடலில் ஏற்பட்ட அதிகரிப்பு 2019 யூலை இறுதியில் படுகடன் இருப்பு குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்பதற்குப் பங்களித்தது. அதேவேளை, செலாவணி வீதத்தில் ஏற்பட்ட உயர்வு வெளிநின்ற படுகடனின் ரூபாய்ப் பெறுமதி 2019 யூலை இறுதியில் ரூ.190.9 பில்லியனால் குறைவடைவதற்குப் பங்களித்தது. எனினும், படுகடன் இருப்பு ரூ.58.3 பில்லியனினால் அதிகரித்தமைக்கு கழிவிடல் காரணியே காரணமாக இருந்தது. இது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கலினது ஏட்டுப் பெறுமதிக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டின் தேறிய தொகையொன்றாகும்.

அட்டவணை 6.4

வெளிநின்ற மத்திய அரச படுகடன்

ரூ. பில்லியன்

| விடயம் | 2017 | 2018 (அ) | 2018 யூலை இறுதியில் (அ) | 2019 யூலை இறுதியில் (அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டுப் படுகடன் (ஆ)** | **5,594.4** | **6,018.0** | **5,737.7** | **6,453.1** |
| முதிர்ச்சிக் காலப்பகுதியின்படி | | | | |
| குறுங்காலம் | 1,031.2 | 1,134.6 | 1,100.9 | 1,277.1 |
| நடுத்தர மற்றும் நீண்ட காலம் | 4,563.2 | 4,883.4 | 4,636.8 | 5,176.0 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் | 2,328.5 | 2,315.3 | 2,385.2 | 2,702.1 |
| வங்கியல்லாத் துறை | 3,265.9 | 3,702.7 | 3,352.5 | 3,751.0 |
| **வெளிநாட்டுப் படுகடன் (இ)** | **4,718.6** | **5,959.5** | **5,221.3** | **6,192.8** |
| சலுகைக் கடன்கள் | 2,130.5 | 2,705.8 | 2,163.3 | 2,620.3 |
| சலுகையல்லாக் கடன்கள் | 2,588.1 | 3,253.7 | 3,058.0 | 3,572.5 |
| **மொத்த அரச படுகடன்** | **10,313.0** | **11,977.5** | **10,959.0** | **12,645.9** |

(அ) தற்காலிகமானவை

(ஆ) (i) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வசமுள்ள ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் (ii) 2012 சனவரியில் இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிலுவைகளைத் தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட ரூ.78,447 மில்லியன் தொகையான திறைசேரி முறிகள் என்பன உள்ளடக்கப்படவில்லை. 2017 சனவரியில் அவற்றுள் சில திறைசேரி முறிகளின் முதிர்ச்சியின் காரணமாக வெளிநின்ற தொகை ரூ.56,662 மில்லியனாகத் தொடர்ந்துமிருந்தது.

(இ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற பெறுமதிகளை உள்ளடக்குகின்றன

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- **2019 யூலையில் குறுங்கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு அதிகரித்த வேளையில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான உள்நாட்டுப் படுகடனின் பங்கு வீழ்ச்சியடைந்தது.** 2019 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் சதவீதம் 2018 இறுதியின் 18.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2019 யூலை இறுதியில் உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2018 இறுதியின் 12.4 சதவீதத்திலிருந்து 14.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறையின் திறைசேரி உண்டியல்களின் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். அதேவேளை, 2019 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான படுகடனின் விகிதம் 2018 இறுதியின் 81.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 80.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் படுகடனின் சொத்துப்பட்டியலில் மிகப் பெரிய பங்கினை உள்ளடக்கியுள்ள திறைசேரி முறிகளின் சதவீதம் 2018 இறுதியின் 68.8 சதவீதத்திலிருந்து 2019 யூலை இறுதியில் 69.0 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. எனினும், 2019 யூலை இறுதியிலுள்ளவாறு மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் இலங்கைக்கான அபிவிருத்தி முறிகளின் விகிதம் 2018 இறுதியில் காணப்பட்ட 10.2 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதத்திற்குக் குறைவடைந்து மீளாய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் தேறிய மீள்கொடுப்பனவினையும் டொலருக்கெதிரான ரூபாவின் பெறுமதி உயர்வடைவதனையும் பிரதிபலித்தது.

- **2019 யூலை இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் ரூபாய் நியதிகளில் 2018 இறுதியின் ரூ.714.7 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 3,911.0 மில்லியன்) ரூ.700.5 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 3,967.6 மில்லியன்) சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, 2019 யூலை இறுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான வெளிநின்ற படுகடன் ரூ.546.2 பில்லியனாக (ஐ.அ.டொலர் 3,094.1 மில்லியன்) விளங்கிய வேளையில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநின்ற படுகடன் ரூ.154.2 பில்லியனாக (ஐ.அ.டொலர் 873.5 மில்லியன்) விளங்கியது. 2019 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2018 இறுதியின் 11.9 சதவீதத்திலிருந்து 10.9 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அதேவேளை, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2019 யூலை இறுதியில் ரூ.5,752.7 பில்லியனுக்கு ரூ.449.4 பில்லியனால் அதிகரித்தது.

- **2019 யூலை இறுதியில் வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் சலுகையல்லாப் படுகடனின் பங்கு 2018இன் 54.6 சதவீதத்திலிருந்து 57.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன்படி, மொத்த வெளிநாட்டுப் படுகடனின் பங்காக சலுகை ரீதியான வெளிநாட்டுப் படுகடன் 2018 இறுதியின் 45.4 சதவீதத்திலிருந்து 2019 யூலை இறுதியில் 42.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சலுகையல்லாப் படுகடன் ரூ.3,572.5 பில்லியனுக்கு 9.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இடம்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டு வழங்கல்களே முக்கிய காரணமாகும்.

## படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

- **2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,435.5 பில்லியனுக்கு 5.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** இது கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவான ரூ.873.9 பில்லியனையும் (60.9 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவான ரூ.561.6 பில்லியனையும் (39.1 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முறையே ரூ.781.2 பில்லியனாகவும் ரூ.654.3 பில்லியனாகவும் விளங்கின. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2019இன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் 61.2 சதவீதத்திற்கு வகைகூறின.

வரைபடம் 6.6
அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் அரசிறையும்




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **அரசாங்கத்தின் நடுத்தர கால இறை உபாயங்கள், நடுத்தர காலத்தில் அதிகரித்த அரசிறைத் திரட்சியின் உதவியுடன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதன் மீதும் வெளிநின்ற அரச படுகடனை உறுதியானதொரு மட்டத்தில் குறைப்பதன் மீதும் அதன் கவனத்தினைச் செலுத்தின.** 2019 வரவு செலவுத்திட்ட உரையின்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2019இன் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டதுடன் இது 2020இலும் அதற்கு அப்பாலும் மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்தில் மட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அத்தகைய குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினை 2022 அளவில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 72 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மேம்பட்ட அரச அரசிறை மற்றும் செலவின முகாமைத்துவத்தின் உதவியுடன் நடுத்தர காலப்பகுதியொன்றில் ஆரம்ப நிலுவையின் மிகையினைக் கணிசமானளவிலும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மட்டத்திலும் பேணுவதனை அரசாங்கம் இலக்காகக் கொண்டிருக்கிறது. எனினும், 2019இற்கும் அதற்கு அப்பாலுக்குமான எதிர்பார்க்கப்பட்ட இறை இலக்குகளை எய்துவது இறைத் தொழிற்பாடுகளில் காணப்படும் பலயீனமான செயலாற்றத்தின் காரணமாக கடுமையான சவாலுக்குரியதாகவே இருக்கும். 2019இல் அரச அரசிறைச் சேகரிப்பு ஆரம்ப மதிப்பீடுகளிலும் பார்க்க குறைவாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு இறக்குமதியுடன் தொடர்பான வரிகள் குறிப்பாக உந்து ஊர்திகளின் வரிகளில் ஏற்பட்ட சுருக்கம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான போக்கு என்பன காரணங்களாக இருக்கின்றன. செலவினப் பக்கத்தில், 2019இல் அரச செலவினத்திற்குக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அரச செலவினத்தின் மீது காணப்பட்ட மேலதிக அழுத்தங்களை 2019இன் எஞ்சிய காலப்பகுதியிலும் 2020இலும் எதிர்பார்க்க முடியும். இதற்கு, சம்பள அதிகரிப்புக்கள், உதவுதொகைகள், மாற்றல்கள் மற்றும் தேர்தல் தொடர்பான செலவினங்கள் என்பனவற்றின் தூண்டுதலினால் உயர்ந்த மீண்டெழும் செலவினங்கள் எதிர்பார்க்கப்படுவதே காரணமாகும். வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதமும் 2019இன் இலக்கிடப்பட்ட மட்டங்களிலிருந்தும் பிறழ்வடையும் போல் தோன்றுகிறது. ஆகவே, தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசிறைத் திரட்டல் முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு மேலதிக வழிமுறைகள் தேவைப்படும். இதேவேளை, நடுத்தர காலத்தில் அரசிறைச் சேகரிப்பு முயற்சிகளுக்கு இணையாக அரச செலவின முகாமைத்துவத்தில் முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன. மேலும், அரசாங்கத்திற்கிருக்கும்

6

மட்டுப்படுத்தப்பட்ட இறை வசதிகளைக் கவனத்தில் கொள்கையில் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான சுமையினை தளர்த்தும் பொருட்டு நாட்டின் உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச தனியார் பங்குடமையை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். எனவே, சமூக மற்றும் மூலதனச் செலவினத்திற்கு போதுமான வசதிகளை வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி வாய்ப்புகளைப் பேணுவதற்கு பொருத்தமான வழிமுறைகள் அவசியமாகும். மேலும், எதிர்வரும் ஆண்டுகளின் பாரிய வெளிநாட்டு வர்த்தகக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைக் கருத்திற் கொள்கையில், படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டினை சுமுகப்படுத்துவதன் மூலமாகப் பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைக்கிடுவதும் முதிர்ச்சிக் கொடுப்பனவுகளுக்கு முன்கூட்டியே நிதியிடுவதும் மீள்நிதியிடல் செலவுகளைக் குறைப்பதற்கும் இடர்நேர்வுகளை முன்மதியுடன் முகாமைப்படுத்துவதற்கும் இன்றியமையாதனவாகும். நடுத்தர காலத்தில் அரச படுகடனை எதிர்பார்க்கப்பட்டவாறு குறைப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் ஆரம்ப மிகையினை குறிப்பிட்டளவிலும் நீடித்துநிலைத்திருக்கும் விதத்திலும் உறுதிப்படுத்துவதற்கு அரச இறை உபாயங்கள் அவசியமானவையாக இருக்கும்.

6